**அறிவு கேந்திர நிலையமொன்றாக பாடசாலைக் கல்வி முறைமையை மறுசீரமைத்தல் செயற்திட்டம் (ரீஎஸ்ஈபி) - மாகாண மட்டம் - 2017**

---

அறிவு கேந்திர நிலையமொன்றாக பாடசாலைக் கல்வி முறைமையை மறுசீரமைத்தல் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட நிதி முகாமைத்துவ அறிக்கையின் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 5037-எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் பட்டோலை - 2 இன் II (பீ) (3) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அவுஸ்திரேலிய நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2013 யூலை 18 ஆந் திகதியிடப்பட்ட ரீஎவ் 013267 ஆம் இலக்க அவுஸ்திரேலியன் மானிய உடன்படிக்கையின் II (பீ) (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதியளித்தல் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், தேசிய மட்டத்தில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை கல்வி அமைச்சால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட அதேவேளை மாகாண மட்டத்திலான நடவடிக்கைகளானவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினாலும் அனைத்து மாகாண சபைகளிலுமுள்ள மாகாண கல்வி அமைச்சுக்களாலும் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மாகாண மட்டத்தில் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினாலும் மாகாண கல்வி அமைச்சுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், நாட்டின் பொதுவான கல்வித்துறை முகங்கொடுக்கின்ற சவால்களை முன்வைக்கின்ற கல்வித்துறை அபிவிருத்திக் கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2012-2016 இனை அமுல்படுத்துவதற்கான நிதி ஆதரவை வழங்குவதற்கு செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இலங்கையில் அறிவுசார்ந்த பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான அடிப்படையினை வழங்குவதற்கு ஆரம்ப மற்றும் இரண்டாந்தர கல்வியின் தரத்தை அடைந்து கொள்வதற்கான வழிகளை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நிதியளித்தல் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் ரூபா 13,000 மில்லியனுக்குச் சமமான எஸ்டீஆர் 64.1 மில்லியன் (யூஎஸ் டொலர் 100 மில்லியன்) கடன் பெறுகைகள் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் அவுஸ்திரேலியன் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் யூஎஸ் டொலர் 11.13 மில்லியன் மானியத்தை வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்ட உடன்படிக்கைக்கு 2016 யூன் 28 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம், மானியமானது ரூபா 5,845 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 39.11 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான நிதிகளில் 70 சதவீதமான கடன் பெறுகைகள் மாகாண கல்வி அதிகாரசபைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி 30 சதவீதமானவை கல்வி அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2012 ஒக்தோபர் 01 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்திசெய்வதற்குத் பட்டியலிடப்பட்டிருந்தது. மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருந்த நடவடிக்கைகள் 2016 ஏப்ரல் 30 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான மீதான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

மாகாண சபைகளின் திரட்டிய இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்றும்,

(ஆ) செயற்திட்ட ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர்கள் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் நிதிப்பிரமாணம் 150 மற்றும் உரிய மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைகளின் கல்வி அமைச்சுக்களின் 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளானவை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் உரிய மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. மேற்கூறிய ஒதுக்கீட்டுக் கணக்குகளானவை பொதுத்திறைசேரியினால் பேணப்பட்ட அறிக்கைகள் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் மாகாண சபைகளின் கல்வி அமைச்சுக்களால் பேணப்பட்ட ஏடுகள், பதிவேடுகள், குறிப்புக்கள் என்பவற்றுடன் இணங்கியிருந்தன. கடன் மற்றும் மானியப் பெறுவனவுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கிரயங்களானவை மாகாண சபைகளின் கல்வி அமைச்சுக்களது செயற்பாடு மற்றும் மேற்பார்வை ஆதரவு பிரிவினாலும் 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் உரியமுறைப்படி பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) நிதியளிப்பு மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தின் திரண்ட நிதியளித்தல் முகாமைத்துவ அறிக்கையின் பிரகாரம், அனைத்து மாகாண சபைகளினதும் மாகாண கல்வி அமைச்சுக்களாலும் செயற்பாட்டு மற்றும் கண்காணிப்பு ஆதரவு அலகினாலும் அனைத்து நிதி மூலங்களிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்தின் மொத்த கிரயம் ரூபா 133,121.51 மில்லியனாக இருந்தது. கல்வித்துறைக்கான பாதீட்டு மதிப்பீட்டிற்கு ஆதரவளிப்பதற்காக சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்தும் அவுஸ்திரேலிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிகளின் நிதியளித்தல், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதும் 2017 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு போன்றன தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளித்தல் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடீஏ | 100 | 13,000 | 1,650 | 6.90 | 1,056 | 65.99 | 8,992 |
| ஏயூஎஸ்ஏஐடீ | 39 | 5,845 | 1,080 | 6.50 | 987 | 29.85 | 4,150 |
| **மொத்தம்** | **139** | **18,845** | **2,730** | **13.40** | **2,043** | **95.84** | **13,142** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக தொழிற்பாட்டு மாற்று கண்காணிப்பு ஆதரவளித்தல் பிரிவிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 40 மில்லியன் ஒதுக்கீட்டை உள்ளடக்கி செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக 2017 இன் வருடாந்த பாதீட்டினூடாக ரூபா 2,730 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,043 மில்லியன் தொகை மாத்திரம் பொது திறைசேரியால் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தென் மாகாணத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 280 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் பொதுத் திறைசேரியால் ரூபா 224 மில்லியன் தொகை மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும், அதில் ரூபா 140.38 மில்லியன் தொகையான பெறுகைகள் மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 73.95 மில்லியன் தொகையான செலவழிக்கப்படாத பெறுகைகள் தென் மாகாண சபையின் நிதியக் கணக்கில் இருந்தது. மேலும் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம், ஊவா மாகாணத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 320 மில்லியன் தொகையான மதிப்பீட்டில் பொதுத் திறைசேரியால் ரூபா 257 மில்லியன் தொகை மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 121.26 மில்லியன் தொகையான பெறுகைகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 103.42 மில்லியன் தொகையான செலவழிக்கப்படாத பெறுகைகள் மாகாண சபையால் பராமரிக்கப்பட்ட வைப்பு கணக்கில் இருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 வரையிலான முன்னைய 06 வருடங்கள் காலப்பகுதிக்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் கல்விசார் துறை அபிவிருத்தி வேலைத்திட்டம்

மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை அமுல்படுத்தும் நோக்கதில் ரூபா 2,013.07 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மத்திய மாகாண சபையானது ரூபா 1,270.81 மில்லியன் தொகையை மாத்திரம் பயன்படுத்தியுள்ளது. மாகாண சபையின் மாகாண கல்விசார் நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட பெறுகைகளானது குறித்த நோக்கங்களுக்காக வினைத்திறனாக பயன்படுத்தவில்லையென நிரூபிக்கப்பட்டுள்ளது.

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

செயற்திட்ட நிதியளித்தல் உடன்படிக்கையின் பட்டோலை 01 இன் பிரகாரம், ஆரம்ப மற்றும் இரண்டாந்தரக் கல்விக்கான அணுகுதல்களை ஊக்குவித்தல், கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், கல்விச் சேவைகளின் நல்லாட்சிகளையும் வழங்குதல்களையும் வலுப்படுத்துதல் ஆகிய 03 பிரதான குறிக்கோள்களின் கீழ் பணவளித்தல் இணைப்பு குறிகாட்டிகளை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 யூன் 20 இல் கல்வி அமைச்சால் பிரசுரிக்கப்பட்ட பாடசாலை தொகை மதிப்பு - 2017 இல் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலை முறைமையானது 10,194 அரச பாடசாலைகளை உள்ளடக்கியுள்ளதுடன் அதில் மத்திய மாகாணத்திலுள்ள 812 அத்தகைய பாடசாலைகளை உள்ளடக்கி 5161 பாடசாலைகள் 200 மாணவர்களை விட குறைவாக கொண்டுள்ளது. மேலும் மேல் மாகாணத்திலுள்ள 79 அத்தகைய பாடசாலைகளை உள்ளடக்கி 206 பாடசாலைகள் 2500 ஐ விட அதிகமான மாணவர்களை கொண்டுள்ளது. ஆகையால் நாடளாவிய ரீதியில் உள்ள நகர பிரதேசத்திலுள்ள சிறப்புப் பாடசாலையினுள் மாணவ சனத்தொகையானது பரவலாக்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஆ) ஊவா மாகாணத்திலுள்ள பாடசாலை அதிபர்களின் ஒதுக்கீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையில், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 கல்விசார் வலயங்களின் ஏனைய பாடசாலைகள் மிகையாக உள்ள 124 அதிபர்களுடன் 442 பாடசாலைகளுக்காக அதிபர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நியாயமான முறையில் பாடசாலை அதிபர்களை ஒதுக்கீடு செய்வதற்கு ஊவா மாகாண சபையால் ஒழுங்கமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 868 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்ட ஆசிரியர் விடுதிகள் மற்றும் பற்சிகிச்சை நிலையங்கள் போன்றவற்றின் புனரமைப்பு வேலைகள் மற்றும் மத்திய மாகாணத்தில் உள்ள நுவரெலியா மாவட்டத்திலுள்ள மாகாண பாடசாலைகளுக்காக குடிநீர் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதற்கான வேலைகள் ஒப்பந்த திகதியிலிருந்து 01 வருடம் கடந்த பின்னரும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவியாவில் உள்ள மகாசேன் ஆரம்ப பாடசாலை, றம்பவேவிலுள்ள தம்பகொலவெல ஆரம்ப பாடசாலை, தமன்கடுவெலவிலுள்ள சிங்கபுர ஆரம்ப பாடசாலை, வெலிகந்தவில் உள்ள கலாகஹல ஆரம்ப பாடசாலை மற்றும் நுரானியா ஆரம்ப பாடசாலை மற்றும் வடமத்திய மாகாணத்திலுள்ள கிரித்தலவிலுள்ள வெலிகந்த மற்றும் ஜனபாலயம் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட களப்பரீட்சிப்பில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களில் குறைபாடுகள் அவதானிப்பட்டிருந்தது. ஆகையால் நிர்மாண வேலைகளின் முறையான மேற்பார்வைக்காக போதியளவு கவனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

**3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 யூலை இல் ரூபா 6.11 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள் 2018 மார்ச் 23 இலும் மத்திய மாகாணத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 14 மாகாணப்பாடசாலைகளின் பயன்பாட்டிற்காக ரூபா 13.07 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட விஞ்ஞான உபகரணம் உபகரணத்தின் இழிவான தரத்தினால் பாடசாலைகளில் பயன்பாடற்றிருந்தது. மேலும், ரூபா 5.27 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட விஞ்ஞான மற்றும் கணித உபகரணம் ஆசிரியர்கள் மற்றும் ஆய்வுகூடாளர்கள் இன்மையால் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 08 மாகாணப்பாடசாலைகளில் விளைவற்றிருந்தது.

(இ) ரூபா 2.82 மில்லியன் கிரயத்தில் ஊவா மாகாணத்திலுள்ள தம்பனா ஆரம்ப பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சாதாரண மட்ட ஆய்வுகூட கட்டிடம் தரைக்கு மாபில் பதித்தல் மற்றும் கூரையிடல் வேலைகள் 2018 யூன் 30 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்காமையால் கையளித்தல் திகதியான 2017 சனவரி 06 இலிருந்து பயன்படுத்தப்படாமலிருந்தது என அவதானிக்கபட்டது. மேலும், ஊவா மாகாணத்தில் கிவுலெகெடேறவில் நிர்மாணிக்கப்பட்ட நூலகக் கட்டிடமானது வாசிப்பு பொருட்களின்மையால் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நூலகத்திற்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்க பதிலாக விஞ்ஞான ஆய்வுகூடத்திற்காக போதிய வசதிகளை வழங்குவதன் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட அவசர தேவைகளை செயற்திட்டம் இனங்கண்டிருக்கவில்லையென என அவதானிக்கப்பட்டது.